Judicial Form No.53
(See Rule 42)

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C.)

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, NAMAKKAL**

**Sessions Case No. 69 of 2025**

**Deposition of P.W.8 witness for Prosecution**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : திரு. சுப்ரமணியன் | Taluk | : | |
| Father's/ Husband's Name | : | Calling | : | |
| Village | : | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 17th day of March 2026.

(A1 and A2 are present.)

**முதல்நிலை விசாரணை:**

நான் தற்போது குமாரசாமிபாளையம் ஆரியக்காட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்து போன மனோஜ் மற்றும் அவரது மனைவி பிரியாவை எனக்கு தெரியும். சம்பவம் பற்றி நான் கேள்விபட்டேன். 16.09.2024ம் தேதி இரவு 9.30 மணிக்கு மனோஜ்குமாரை அவரது மனைவி பிரியாவின் அண்ணா சுந்தரராஜ் மற்றும் தங்கவேலும் கையாலும், காலாலும் அடித்ததாகவும் நெஞ்சில் உதைத்தாகவும், அதனால் மனோஜிற்கு மூச்சு பேச்சு இல்லாமல் போய் அவரை ஆஸ்பத்திரிக்கு கூட்டி போனதாக கேள்விபட்டேன். மறுநாள் 17.09.2024ம் தேதியில் காலை 6 மணிக்கு நானும், எங்கள் ஊரை சேர்ந்த வாங்கிலியப்பன் என்பவரும் அம்மன் லேத் பட்டறை அருகே நின்று பேசிக் கொண்டிருந்த போது அப்போது காவல் ஆய்வாளர் எங்களை கூப்பிட்டு பேசினார். மனோஜ் இறந்த இடத்தை பார்த்து வரைபடம் வரைந்து கொண்டிருக்கிறேன். அதற்கு நீங்கள் சாட்சியாக இருக்க வேண்டும் என்று சொன்னார். பிறகு, வரைபடம் தயார் செய்தார்கள். பேப்பரில் எழுதினார்கள். அதன்பிறகு, எங்கள் இருவரிடமும்

சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது தான். 2வது சாட்சியாக வாங்கிலியப்பன் போட்டார். அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.8 ஆகும். கையெழுத்து வாங்கிய பிறகு, எனது வாக்குமூலத்தை லேப்டாப்பில் பதிவு செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

**போலீசார்** என்னை காலை 7.30 மணிக்குள் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். அதை படித்து பார்த்ததில் சரியாக இருந்தது. அங்கிருந்த கடை வீடுகளை பார்த்து தான் பார்வை மகஜரில் எழுதினார்கள். அந்த பார்வை மகஜரில் அம்மன் லேத் பட்டறை மற்றும் சுப்பையன் என்பவர் வீடு மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வேறு வீடுகளோ, கடைகளோ இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் 17ம் தேதி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு போகவில்லை. நான் பிரேத விசாரணை அறிக்கையில் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ளேன். நான் சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்தை பார்வையிடவில்லை என்றால் சரியல்ல. நான் மனோஜ் குடும்பத்திற்கு வேண்டியவர் என்றும், எனது வாக்குமூலம் மருத்துவமனையில் வைத்து ஜோடிக்கப்பட்டது என்றும், அங்கு வைத்து தான் எங்களிடம் பார்வை மகஜரில் கையெழுத்து வாங்கப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

நான் போலீசார் விசாரணையில் பிரேத விசாரணை அறிக்கையில் கையெழுத்து போட்டதாக சொல்லவில்லை.

**மறுவிசாரணை** : இல்லை.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையெழுத்து இட்டார்.

Sd/- R. Gurumurthy
முதன்மை மாவட்ட நீதிமன்ற நீதிபதி,
நாமக்கல்.